170062

ஸ்ரீ திரௌபதி தேவி

பிரம்மோத்ஸவ பிரகடனம்

Q25:417
N25
170062

171

ஸ்ரீ

ஸ்ரீகிருஷ்ணய நமஹ:



OFFICE OF THE REGISTRAR
16 APR 1925
MADRAS

சின்னபாபஸமுத்ர

ஸ்தளம்

# ஸ்ரீதிரௌபதி தேவி

# பிரய்ஹோத்ஸவ பிரகடனம்.

இஃது

சின்னபாபஸமுத்ரம்

பிரம்ஹஸ்ரீ இராமைய்யர் குமாரர்

அப்பய்யரவர்களால்

இயற்றப்பட்டு

சிருவை மா-ள-ஸ்ரீ வரதா ரெட்டியார் குமாரர்

**K V.** குப்புசாமி ரெட்டியாரவர்ஹளுடைய

பொருளுதவியில்

திண்டிவனம் சத்தாரியா அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1925.

171
25

ஓம் ஹரி:

நன்றுக குருவாழ்க

16 APR 1925

ஸ்ரீகிருஷ்ணாய நமஹ

ஸ்ரீதிரௌபதீ தேவ்யை நமஹ.

சின்னபாபஸமுத்ர

ஸ்தள

## ஸ்ரீதிரௌபதீ தேவி

# பிரம்ஹோத்ஸவ பிரகடனம்.

கணேசத தியானம்.

சுலோகம்.

ஸ்ரீமத் வாகீச லக்ஷ்மீச கௌரீசா த்யகிலாமரைஹி
ய:ப் பூஜ்யதே முதான் னித்யம் தம் வந்தே த்விரதானனம்

ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி த்யானம்.

கிருஷ்ணாய வாஸுதேவாய தேவகீ நந்தனாயச
நந்தகோப குமாராய கோவிந்தாய நமோ நமஹ

பாண்டவர்ஹள் த்யானம்.

தர்மராஜாய பீமாய பார்த்தாய நகுலாயச
ஸஹாதேவாயச நமஸ் ஸர்வ கார்யார்த்த ஸித்தயே

ஸ்ரீதிரௌபதி தேவித்யானம்.

நமஸ்தே த்ரௌபதீ தேவி ஹ்ருதயாம்புஜ வாஸினீ
த்வாமஹம் ப்ரார்த்தயே நித்யம் ஸர்வசக்தி ஸ்வரூபிணீ

போதராஜ த்யானம்.

சுருதி ப...ாம் மஹா சாந்தம் மந்த்ர சாஸ்த்ர விசாரதம்
...ருதிநிதிம் போதராஜம் நமாம்யஹம.

...ந்தாலராஜ த்யானம்.

...தும் ஸர்வ சஸ்த்ராஸ்த்ர தாரிணம்
...நம் முக்கால நிருபதிம் பஜே

294-536
698
25:49
N25
120062

170062

### ஆஞ்சநேய த்யானம்.

ஆம்ஷ்பீக்ருத மார்த்தாண்டம் கோஷ்பதீ க்ருத ஸாகரம்
திரிணீகிருத தசக்ரீவம் ஆஞ்சநேயம் நமாம்யஹம்

### அவையடக்கம்

வியாளாச்ரிதாபி விபலாபி ஸகண்ட காபி
வக்ராபி பங்கில பவாபி துராஸதாபி
கந்தேன பந்துரஸி கேதகி ஸர்வ ஜந்தோர்ஹா
ஏகோ குணக்கலு நிஹந்தி ஸமஸ்த தோஷான்

### கிரந்தகல்ப நமஸ்காரம்

ஸ்ரீமத் வியாஸ மஹர்ஷி ஜயமுனி நந்நயபட்டர் திக்க ஸோமயாஜி நல்லாப் பிள்ளை ஸ்ரீ வில்லிபுத்தூராழ்வார் முதலியவர்ஹளால் செய்திருக்கும் ஸ்ரீமஹாபாரதமாஹிய இதிஹாஸத்தில் சொல்லியிருக்கிறபடி பரிபூர்ணமான மாஹாத்மியம், தீரத்வம், கீர்த்தி, விபவம், புத்தி, வைராக்கியம் என்னும் ஷட்குண ஐச்வர்யங்களுள்ள பகவதியாய் விளங்கும் ஸ்ரீதிரௌபதி தேவியின் பிரம்ஹோத்ஸவ பிரகடனம் இந்நூலில் கூறுகின்றபடியால் ஸர்வ சாஸ்த்ர சதுரத்வ நிபுணர்களும் பர்வதுதாஹலாபேக்ஷித திஷணர்களும் ஸகல பகவத் பக்தர்ஹளும் நிகில கிரந்த கர்த்தர்களும் இதிலுள்ள விகுணங்களை நீக்கி ஸகுணங்களாக்கி பாவனமாக்க ஸேவனமாஹ பிரார்த்தித்துச் சொல்லுகின்றேன்.

### பிரதமாத்தியாயம்

ஸ்ரீமதகிலாண்டகோடி பிரம்ஹாண்டநாயகராய் எங்கும் நிறைந்திருக்கும் ஸ்வயம்புவாஹிய பகவானுடைய அனுக்கிரஹத்தாலுண்டான சதுர்த்தச புவனங்களில் ஒன்றாகிய பூமண்டலத்தில் ஸமஸ்த ஸத்குணலங்க்ருதமாயும் நமஸ்கிருத மஹா ஸாமனஸ நிவஸனமாயும் மஹா புண்ணியமாயும், முனிவல்லப கண்ணிய

O25:417 N25

மாயும் குஸுமபல நிகாயோத்தித ஸாத்குண்ணியமாயும் அரண்ணியங்களுக்குள் ஸ்தோத்ர பாத்ரமாயுள்ள நைமிசாரண்ணிய மென்னும் புண்ணிய க்ஷேத்திரத்தில் வஸிக்கும் சௌனகாதி மஹர்ஷிஹள் ஒருநாள் உதய காலத்தில் ஸதய ஹிருதய பகவந்நாம ஸங்கீர்த்தனத்துடன் துயிலெழுந்து ஸ்நான ஸந்தியாதி நித்ய நைமித்திக காம்ய கர்மானுஷ்டானங்கள் முடித்துக்கொண்டு ஸுகாஸீனர்ஹளாய் இருக்கும் ஸமயத்தில் அம் முனிவர்களை பார்க்கவேண்டுமென்று குதூஹலத்துடன் ரோமஹர்ஷணர் குமாரரான ஸூதபுராணிகர் வந்து சௌனகர் முதலிய மஹர்ஷிகளைக்கண்டு நமஸ்கரித்து அம் முனிவர்ஹளால் கொடுத்த பீடத்தில் பரம ஸந்தோஷமாய் வீற்றிருந்தார்.

## த்விதீயாத்தியாயம்

அப்பொழுது அங்கிருந்த முனிவர்ஹள் ஸூதபுராணிகரைப் பார்த்து நமஸ்கரித்து தங்களால் அனேக புராணேதிஹாஸங்கள் நாங்கள் கேட்டும் எங்கள்மனது இன்னமும் திருப்தி யடையவில்லை. ஆகையால் தங்களுடைய முகாரவிந்த மகரந்த பானாஸக்தியுள்ள எங்களுக்கு சுரோத்ரானந்தமாய் சொல்லிய சரித்திரத்தில் ஸுநீத வேந்தனுக்காஹ அக்னியில் பிறந்து அகிலோமாஸுரனை ஸம்ஹரித்து அர்ச்சாரூபமாய் செஞ்சிதிருக்கோயிலில் பிரஸித்திபாயிருக்கும் ஸ்ரீதிரௌபதிதேவியை சததன்வ மஹாராஜா கிரஹத்தில் ஆவாஹனம் செய்து சின்னபாபஸமுத்ரம் ஸ்தளத்துக்கு கொண்டுவந்ததாஹ முன் சொல்லிருந்தீர். அவ்விதமாய் தேவியை அவ்விடத்துக்கு அம்மஹாராஜா கொண்டுவந்தகாரணமென்ன அந்த ஸ்தளம் எவ்விடத்திலிருக்கின்றது அதில் அம் மஹாதேவியை எவ்விதமாய் ஸ்தாபனம் செய்து ஆரா

தனை முதலிய மஹோத்ஸவ தர்மகைங்கரியங்கள் நடந்
துவரும் விதமெப்படி அவ்விடத்தில் அம்மனுடைய பிர
பாவத்தால் நடந்துவரும் விசேஷங்களென்ன இதுஹ
ளெல்லாம் ஸவிஸ்தாரமாய் தாங்கள் எங்களுக்கு இன்று
தயவுடன் சொல்லவேண்டுமென்று வணங்கி பிரார்த்தி
க்க ஸந்தோஷமாய் அருமென்று புராண நிர்வாக நிபுண
ஸாதயவதேயரை ஸ்துதி செய்து ஸகல கல்யாணகுண
பிராமனாஹிய பகவானுடைய அனுக்கிரஹத்தினால் நீங்
கள் என்னைக்கேட்ட ஸாத்வி சரித்திரம் சொல்ல விசித்
திரம் பக்தியாய் கேட்க்கும் பிரஜைகளுக்கு பவித்ரம்
பாபமென்னும் கொடிகளுக்கு லவித்ரம் அதெப்படி
யென்றால்:—

> அஹல்யா த்ரௌபதீ ஸீதா தாராமண்டோதரீ ஸ்ததா
> பஞ்ச கன்யாஸ்மரேந் நித்யம் மஹா பாதக நாசனம்

என்றிருப்பதால் அஹல்யாதேவி, த்ரௌபதிதேவி,
ஸீதாதேவி, தாராதேவி, மண்டோதரீதேவி என்னும்
பஞ்சகன்னிகைஹளை நினைப்பவர்களுக்கு மஹா பாபங்
களும் நாசனமாய் விடுமென்றிருப்பதால் பரம பதிவ்
ரதா சிரோன்மணியாய் விளங்கும் ஸ்ரீத்ரௌபதீதேவி
யின் பிரபாவ சரித்ர ஸ்வபாவ மநோகமா யிருப்பதா
னும் பாராசர மஹர்ஷியின் குமாரரான வியாஸ முனீந்
திரால் செய்த மஹா பாரதமாஹிய இதிஹாஸம் அறு
பது லக்ஷம் சுலோகங்களாயிருப்பதாலும் அனேக
மஹர்ஷிஹள் அதை ஸம்ஹிதைஹளாஹ செய்திருப்
பதில் ஒன்றாஹிய மார்க்கண்டேய ஸம்ஹிதையில்
காலவ்ஸம் வாதோக்த நீதியாய் சொல்லிவருகிறேன்
கேளுங்கள் அதினால் உங்கள் மனோதிருப்தியாஹும்
மேலும் உங்கள் மனோபீஷ்டப் பிரதாயகமாயும் மஹாத்

புதமாயும், மஹாச்ராவ்யமாயும், ச்ரோத்ரானந்தமாயும் இருக்குமென்று ஸர்வ சாஸ்த்ர விசாரதாபிதான பௌராணிகோத்தமராஹிய ஸ்ரீஸூதபுராணிகர் சொல்லத் தொடங்கினார்.

## திரிதீய்யாத்யாயம்.

ஸ்ரீமதகண்ட மண்டலாகாரமாய் விளங்கும் பூமண்டலாந்தர்க்கத ஜம்பூத்வீபஸ்தித பரதகண்டத்திலிருக்கும் பாரதவர்ஷத்தில் தேஜோமயமாகிய ஸ்ரீஅருணாசல க்ஷேத்ரத்துக்கு பிராக்பாகத்தில் பிரஸித்தியான திருவாண்டார் கோவில் என்னும் சிவக்ஷேத்ரத்துக்கும், திருபுவனம் என்னும் விஷ்ணுக்ஷேத்ரத்துக்கும் கிழக்கிலும் விரிஷப கிரியில் உத்பத்தியாய் வரும் பம்பா நதிக்கு தெற்கிலும், வராஹமலையிலிருந்து வரும் வராஹ நதிக்கும் அதின் தென்புரத்திலும், வடபுரத்திலும் உள்ள சிவக்ஷேத்ரங்களாஹிய பில்வபுரிக்கும் திருக்காசிக்கும் மேற்கிலும் நந்திதுர்கமென்கிற பர்வதத்திலிருந்து தென் திசையாய் வரும் தக்ஷிண பினாகினி என்று வழங்கும் தென்பெண்ணைக்கி வடக்கிலும் ஸூமனஸ விஹாரார்த்தம் ஸர்வாமர பிரார்த்திதமாய் பூர்வம் விச்வகர்மாவால் அஷ்டகோணாகாரமாய் மிஹவும் ச்ரேஷ்ட்டமாஹு ஸர்வேஷ்ட்டப் பிரதாயகமான சின்னபாபஸமுத்ர ஸ்தளமென்றொரு கரிஷ்ட்ட வரபுரம் நியமிக்கப்பட்டது. அந்த பட்டணமானது ஸர்வலக்ஷண ஸம்பன்னமாயுள்ளது அதிலுள்ள பிரஜைஹளை ஸபரிவாரங்களுடன் ஸூமதிசர்மா வென்கிற பூஸூரச்ரேஷ்ட்டர் பாஸூரமாக பாலனம்செய்து வந்தார் அவர் தார்மிக பிரபுவானதால் ஸத்காலக்ஷேபமும், ஸத்ஸஹவாஸமும், ஸத் தர்மங்களும் செய்துக்கொண்டு ஸலலிதமாய் ஸதயஹ்ருதய ஸமன்வித ஸர்வ

ஜீவகாருண்ணிய மூர்த்தியாய் ஸர்வஜன ஸம்மதமாஹ ஸாந்த்ர வைபவத்துடன் ஸ்வாமிபாத ஸேவா துரந்தராய் அபேதகமாஹ ஸ்ரீமதருணாசலேச்வர ஸ்வாமி ஸந்நிதியும் ஸ்ரீபிரஸன்ன வெங்கடாசலபதி ஸ்வாமி ஸந்நிதியும் சாஸ்த்ர விஹிதப்படி கட்டி அதில் சிவகேசவர்ஹளை பிரதிஷ்ட்டை செய்து ஸமரஸமாய் ஹரிஹராலயங்களை ஆராதனை செய்துக்கொண்டு ஆனந்தமாயிருக்கும் காலத்தில் இதற்கு ராஜதானியாயும் முக்கிய பட்டணமாயும் உள்ள செஞ்சி நகரத்தையாளும் சததன்வ மஹாராஜா தன்குலமாஹிய சந்திர வம்சத்தில் தன்னுடைய முன்னோர்களில் மஹாநந்தி ராஜாவினால் சூத்ரயோனி ஸம்பர்க்க தோஷக்ரஸ்தமாய்விட்டதால் பிதுர் தேவதைஹள் ஸ்வர்க்கத்திலிருந்து விலக்கப்பட்டு நரகத்தில் நிவஸிக்கப்பட்டு ஹராரர்ஹளென்பதை சாஸ்த்ர ஸூசனையால் கேழ்விப்பட்டு துக்கப்பட்டுக்கொண்டிருக்கையில் தர்மசாஸ்த்ரபர்யாலோசனையில் தேர்ந்த வேதியரொருவர் மஹாராஜாவை பார்த்து மாகமாஸத்தில் மஹாநதிஸ்நானம் செய்யும் புண்ணிய புருஷர்ஹளின் முன்னோர்ஹள் நரகலோகத்திலிருந்து நீக்கப்பட்டு புண்ணிய லோகத்திலிருப்பார்களென்று சொன்னதும் மனதிலிருந்த கஷ்டத்தைவிட்டு மஹா ஸந்தோஷப்பட்டு மாகஸ்நான விரமும் ஸ்நான கட்டமும் எனக்கு நன்றாய்ச் சொல்லவேண்டுமென்று விநயமாஹ பிரார்த்திக்கும் ராஜனுக்கு வேதியர் சொல்லத் தொடங்கினார்.

## சதுர்த்தாத்யாயம்.

கேளும் மஹாராஜனே தைமாஸம் அமாவாஸ்யை கழித்த மறுநாள் முதல் மாசிமாஸம் அமாவாஸ்யை வரையிலும் கூடிய நாள் முப்பதும் மாகமாஸமென்று சொல்லப்படும்- அந்த மாக மாஸத்தில் மஹா நதியில்

பிராதக்காலம் மஹாஸங்கல்பத்துடன் ஸ்நானம்செய்து
சக்தியானுஸாரம் தான தர்மங்களும் விப்ரகோ பூஜை
ஹளும் பிராம்ஹண ஸமாராதனைஹளும் விரத நியமத்
துடன் நடத்தப்பட்டவர்ஹளின் வம்சம் பாவனமாய்
பரமகைவல்ய பதவியில் மாகஸ்நான புண்ய சிலர்ஹள்
வம்சஸ்தர்ஹளுடன் பகவத் பாதார விந்த ஸேவை
செய்துக்கொண்டு பிரம்ஹ கல்பம வரையிலும் வஸித்து
க்கொண்டிருப்பார்ஹள் மஹாநதி என்றால் மலையில்
பிறந்து பிரத்யக்ஷக்ஷமாய் ஸமுத்ரத்தில் ஸங்கமமா
ஹாம் ஆறுக்கு பெயரானதால் வராஹமலையில் உத்பத்
தியாய் இந்த செஞ்சியிலிருந்து பிரஸன்னமாய் ஸமுத
ரத்தில் சேரும் வராஹ நதியும் விருஷபகிரியில் பிறந்து
பிரத்யக்ஷக்ஷமாய் ஸமுத்ரத்தில் சேரும் பம்பா நதியும்
கலந்தோடும் இடத்தில் தேவர்ஹள் பிரார்த்தனைப்படி
விச்வகர்மாவால் ஸ்ருஷ்டிக்கபபட்ட சின்னபாபஸமு
த்ர ஸ்தளத்தில் வாஸமாயிருந்து வராஹ பம்பா நதிஹ
ளின் ஸங்கமதீரத்தில் ஸ்நான தானத்யனுஷ்டானங்
கள் செய்ய மாகமாஸத்துக் குசிதமென்று சொன்ன
வேதியர் வாக்கியப்படி மந்த்ரி முதலானவர்ஹளால்
மாக ஸ்நானோபயுக்தஸம்பாரங்கள் ஸஹிதமாயும் சது
ரங்க பலங்களுடனும் ஸபரிவார ஸமேதமாயும் தன்
குல தெய்வங்களாயிருக்கும் ஸ்ரீபசுபதீச்வர ஸ்வாமி
யையும், ஸ்ரீவேணுகாபால ஸ்வாமியையும் ஆந்தோளி
கையில் எத்திக்கொண்டும் ஸங்கீத வேந்தனால் அர்ச்சா
ரூபமாஹ பிரதிஷ்டைசெய்து ஆராதித்துவரும் வம்ச
பிதாமஹியாஹிய ஸ்ரீதிரௌபதீதேவியை தாம்ரகாஹ
த்தில் பிராணபிரதிஷ்டையுடன் ஆவாஹனம் செய்து
எடுத்துக்கொண்டு தூர்ய கோஷங்களுடன் சின்னபாப
ஸமுத்ரம் ஸ்தளத்துக்கு வந்து அதற்கு வடபுறமிருக்
கும் கனபாபஸமுதரத்தில் பிரதானிஹளால் நியமித்தி

ருக்கும் ஆலயங்களில் ஸ்ரீபசுபதீச்வர ஸ்வாமியையும் ஸ்ரீவேணுகோபல ஸ்வாமியையும் ஸ்தாபனம் செய்து பூஜித்துக்கொண்டும் ஸ்ரீவராஹபம்பா நதிஹளின் ஸங்க தீரத்தில் கட்டியிருக்கும் மஹாபண்டபத்தில் ஸ்ரீதிரௌபதீ தேவியை ஆவாஹனம் செய்துக்கொண்டு வந்திருக்கும் கரஹத்தை ஸ்வர்ணபீடத்தில் வைத்து அதன் கீழ்புரத்தில் கட்டியிருக்கும் தர்ம ஸதாத்தில் பத்னீபுத்ர பரிவார ஸமேதமாய் மஹாராஜாவும் இதர ஸேனா ஸமூஹங்கள் தத்ஸமீப ஸ்தானங்களிலும் மாகஸ்நானத்தை முன்னிட்டு வாஸம் செய்துக்கொண்டிருக்தார்ஹள்.

## பஞ்சமாத்யாயம்.

இவ்விதமாய் ஸபரிவாரங்களுடன் மாகஸ்நானத்துக்கு வந்திருக்கும் சகதன்வமஹாராஜா கோரிக்கைப்படி தையமாவாஸ்யை முதல் மாசி அமாவாஸ்யை வரையிலும் வுள்ள மாகமாஸம் முழுதும ஸ்ரீவராஹபம்பா நதிஹளின் ஸங்கம ஸ்தானத்தில் நியதிப்படி ஸ்நானம் செய்து தான தர்மங்களும் பிராம்ஹண ஸமாராதனையும் நடத்தி முப்பத்தோராம் நாள் மாகஸ்நான விரதோத்யாபனம் செய்து அர்ச்சித்த கங்காதேவ்யாவாஹன கலசத்தை பிராம்ஹணர்பிதமாஹ மஹாதானங்களுடன் தானம் செய்து பூஜாத்திரவ்யங்களை வேதநிதான் வித்வாத்பங்களுடன் ஸ்ரீவராஹம்பா நதிஹளின் ஸங்கம ஸ்தானத்தில் ஸமர்ப்பித்து வந்தன பூர்வகமாய் கங்காதேவியை ஸதுதிக்கும் சததன்வ மஹாராஜனுக்கு ஸ்ரீகங்காதேவி பெண்ணுருவாய் பிரஸன்னமாய் பூர்வம் பகீரத பிரயத்தனத்தால் தராணிதலத்தில் வந்து சாபாக்னியால் பஸ்மமான ஸகரபுத்ரர்களை ஸ்வர்லோக ஸுகமனுபவிக்கச் செய்தேன் இப்போது நீ செய்த

மாகமாஸ ஸ்நான மஹிமையால் உன் வம்சஸ்தர்ஹளா
ஹிய மஹா நந்தி முதலிய நிரயவாஸ நிருபதிஹளை
கைவல்யம் அடையச்செய்தேன். இனிவுன் வம்சஸ்
தர்ஹள் அக்ஷய புண்யலோக வாஸிஹளாய் நிறந்தரா
னந்த மனுபவிப்பார்ஹளென்று சொல்லி அனுக்ரஹம்
செய்து அந்தர்த்தானமாயினள்.

## ஷஷ்டாத்யாயம்.

இப்படி கங்காதேவி அனுக்ரஹம் பெற்ற சததன்
னமஹாராஜா ஸபரிவாரங்களுடன் செஞ்சிக்கு பிரயா
ணமாய் மண்டபத்தில் ஆவாஹனம் செய்து வைத்தி
ருக்கும் திரௌபதிதேவி காஹத்தை எடுக்கையில்
ஆவேச மூலமாய் அரசனைப்பார்த்து உன் பூர்வ வம்ச
ஸ்தர்ஹளில் ஸுநீத வேந்தனுக்கு பிரஸன்னமாய் தன்
சத்ருவாஹிய அசிலோமாஸுரனை ஸம்ஹரிதது அர்ச்
சாரூபமாஹ செஞ்சி திருக்கோயிலில் வீற்றிருந்த நம்
மை தாம்ர கலசத்தில் அங்கந்நியாஸகாந்நியாஸ பூர்வக
மாய் பிராணப்பிரதிஷ்டை மூலமாஹ ஆவாஹனம்
செய்து இவ்விடம் கொண்டுவந்துவிட்டபடியால் இனி
நாம் இவ்விடத்திலிருந்து துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரி
பாலனம் செய்துவருவோம் நாம் கிரியா சக்தியாஹிய
திரௌபதீதேவியென்று தெரிந்துக்கொள்ளென ராஜன்
மிஹவும் பயந்து வணங்கிப் பிரார்த்திததும் அம்மன்
இவ்விடத்தில் தான் இருப்பேன் என்று உறுதியாய்ச்
சொல்ல ராஜன் தனக்குள் சிலநேரம் மௌன நியதியி
லிருந்து மேல் வர்த்தமானமறிந்து அவ்விடத்திற்கதி
பதியாயிருக்கும் ஸுமதி சர்மாவைப்பார்த்து தேவி
காஹம் ஒப்புக்கொடுத்து அம்மண்டபமும் தர்ம ஸத்ர
மும் அவ்விடத்திலிருக்கும் கணேசர் ஸந்நிதியும் தர்ம
தோப்பும் திருவிளக்கு மான்யமும் அவர் பாலனைக்
குட்படுத்தி அரசன் ஆமோதமாய் செஞ்சி நகரம் சேர்
ந்து ஸுகமாயிருந்தார்.

## ஸப்தமாத்யாயம்

அதன் பிரஹு ஸுமதி சர்மா மஹாஸபை சேர்

த்து ஸர்வ ஜன ஸம்மதத்தால் சின்ன பாபஸமுத்ரம் ஸ்தளத்தில் ஸ்ரீதிரௌபதிதேவிக்கு, திவ்யாலயம்கட்டி தேவியை அர்ச்சாரூபமாஹ காஹத்துடன் பிரதிஷ்டை செய்து பாண்டவர்ஹளையும், போதாராஜனையும், முத்தாலராஜனையும், ஸ்ரீகண்ணபிரானையும் திவ்ய மங்கள விக்ரஹங்களாக்கி பிரதிஷ்ட்டை செய்து ஆராதனை நியமகம் செய்து, பிரம்மோத்ஸவத்துக்காஹ பங்குனி மாஸம் அமாவாஸ்யை கழித்ததும் வரும் செவ்வாய்க்கிழமை ஸூர்யாஸ்தமய ஸமயத்துக்கு நகரவாஸிஹளுடன் வாத்திய ஸஹிதமாய் பம்பா நதிக்குப்போய் ஸ்நான பூர்வகமாய் பிரம்ஹோத்ஸவ தீக்ஷைக்ஷ வஹித்து உத்ஸவக்கிரமப்படி ரக்ஷக்ஷா பந்தனத்துடன் அம்மனை அவ்விடமிருந்து காஹத்தில் ஆவாஹனம் செய்து வர்ண்ணித்து பூர்வம் செஞ்சியிலிருந்து காஹமூலமாய் வந்து அம்மன் வஸித்திருந்த மண்டமத்தில் நிருத்தி தீபாராதனை செய்து சின்னபாபஸமுத்ரம் புரப்ரதக்ஷிக்ஷணம் வந்து கலசத்தை ஆலயத்தில்வைத்து தீபாராதனை செய்து த்வஜாரோஹணமென்னும் கொடிகட்டு முத்ஸவம் கிராமாதிபதியிதும் மறுனாள் புதன் கிழமை இரண்டாம் திருவிழா உள்ளூர் கம்மாளருதும் மூன்றும் நாள் வியாழக்கிழமை கண்டமங்கலம் கிராமாதிபதியாஹிய வன்னியகுல கோனேரிக் கவுண்டர் திருவிழாவும், நான்காம் நாள் வெள்ளிக்கிழமையும், ஐந்தாம் நாள் சனிக்கிழமையும் நாராயணபுரம் அக்னிவம்சோத்பவ பிரபு ஆனந்தகிருஷ்ணக் கவுண்டர் வஹைறா திருவிழாவும், ஆறும்நாள் ஞாயற்றுக்கிழமை உள்ளூர் வாணிய செட்டிஹள் உபயமும், ஏழாம் நாள் திங்கட்கிழமை தாண்டவமூர்த்திகுப்பம் கிராமவாஸிஹளாஹிய வன்னியர்ஹளின் திருவிழாவும், அன்றிரவில் அம்மன் ஆலயத்துக்கு எதிரில் கேளிக்கையும், எட்டாம் நாள் செவ்வாய்க்கிழமை உள்ளூர் வன்னியர்ஹள் உபயமும், காஹதிருநாளும், அன்றிரவில் கேளிக்கையும், ஒன்பதாம் நாள் புதன்கிழமை பண்ணகுப்பம் கிராம

வாஸிஹளாஹிய வன்னியர்ஹளின் திருவிழாவும் அன்றிரவில் கேளிக்கையும், பத்தாம் நாள் வியாழக்கிழமை கண்டியன்குப்பம் வன்னியர்ஹளின் திருவிழாவும், அன்றிரவில் கேளிக்கையும், அன்றுபிற்பகல் நாலாவது ஜாமத்தில் அனேக பக்தர்களால் நடத்தும் அம்மன் திருக்கல்யாண மஹோத்ஸவமும், பதினோராம் நாள் வெள்ளிக்கிழமை முற்பகல் முதல் ஸ்ரீமஹாபாரத படனமும, அரவான்பலியும், ஹஸ்தினபுரம் கோட்டையை பிடிப்பதும், மஹாயோகி படேஸாயப்பவர்ஹளிட அனுமதியில் அம்மனிட அனுக்ரஹத்தால் அக்னிப்பிரதிஷ்ட்டாபனமும, ஸாயம்ஸந்தி ஸமயத்தில் கோவிந்த நாம ஸங்கீர்த்தனத்துடன் கரஹ பூர்வகமாஹ திருடபக்தியாய் கிரமாதிபதி நடத்தும் தீமெரிப்பு திருவிழாவும், பன்னிரண்டாம் நாள் சனிக்கிழமைமாலை மஞ்சள் வெய்யில் ஸமயத்தில் உள்ளூர் கர்ணீகர்ஹளுடைய மஞ்சள்நீர் உத்ஸவமும், அன்றிரவில் உள்ளூர் பண்டகாபுஹமென்னும் ரெட்டிமார்ஹளுடைய தீர்த்தோத்ஸவமென்கிற தெப்பஉத்ஸவமும், பதின்மூன்றும்நாள் ஞாயிற்றுக்கிழமை மத்யாஹ்நம் உள்ளூர் பிராம்ஹணர்ஹள் நடத்தும் பட்டாபிஷேக மஹோத்ஸவமும், நான்காம் திருவிழா வெள்ளிக்கிழமை இரவு உள்ளூர் பெருமாள் கவுண்டர் ஸந்ததி பல்லக்கு ஸேவையும், பதினோராம் திருவிழா வெள்ளிக்கிழமைஇரவு உள்ளூர் பண்டகாபு வெங்கடபதி ரெட்டியார் ஸந்ததி பல்லக்கு ஸேவையும், பிரம்ஹோத்ஸவாரம்பம்முதல் பதினெட்டு நாளும் பிரம்ஹோத்ஸவம் கழித்த பிரதம வெள்ளிக்கிழமை இரவு உள்ளூர் வண்ணான் பல்லக்கு ஸேவையும் நடத்தவேண்டியதென்றும் ஒவ்வொரு ஸமயங்களில் பங்குனிமாஸம் அமாவாஸ்யைகழிந்தவுடன்வரும் செவ்வாய்க்கிழமையில் கொடிகட்டும்போது பதினோராம் நாள் வெள்ளிக்கிழமை தீமெரிப்பு திருவிழா சித்திரை மாஸத்தில் வருவதாயிருந்தால் அந்த ஸமயத்தில் மாத்திரம் மாசிமாஸம் அமாவாஸ்யை கழித்தவுடன்

வரும் செவ்வாய்க்கிழமையில் கொடிகட்டி பங்குனி மாஸம் தீமெரிப்பு திருவிழா நடத்தவும். அது சித்தி தாந்தரீதிக்கி பங்குனி அமாவாஸ்யை கழித்ததாஹ நிர்ணயம் என்று ஸ்மிருதி சர்மா ஏற்பாடு செய்து நடத்தி வரும் சின்னபாபஸமுத்ரம் திரௌபதிதேவி பிரம்மோத்ஸவ பிரகடனம் எழுதினவர்களும், படித்தவர்ஹளும், கேட்டவர்ஹளும் ஸ்ரீ திரௌபதி தேவியின் அனுக்ரஹத்தால் இஹத்தில் ஸர்வ ஸௌபாக்கியங்களும் பரத்தில் கைவல்ய பதவி பெற்று நிரந்தரானந்தமாயிருப்பார்கள். சுபமஸ்து.

சின்னபாபஸமுத்ரம் யென்று பெயர் வாய்ந்த காரணம்:— மனுஷ்ய ஸமூஹங்கள் தன்னை ரக்ஷித்துக்கொள்ளும் மார்க்கம் தேடிக்கொள்ள வேண்டியது முக்கியம். பாபம் மனுஷ்யனை மிழுங்கப்பட்டது அவ்வித பாபத்தை சின்னம் பரிக்கப்பட்டது அல்லது கொல்லப்பட்டது நருக்கப்பட்டது ஸமுத்ரம் ஸமஸ்தத்திலும் ஸந்தோஷம் தரததகுந்தது ஈச்வராக்ஞையோடு சேர்ந்துக்கொண்டிருக்கப்பட்டது. ஆகையால் பாபத்தை நாசம் செய்து புண்ணியத்தை விருத்தியாக்கி ஸந்தோஷம் கொடுத்து மறுபடி பாபம் துடராமல் முத்திரை வைத்ததைப்போல் பகவானுடைய தண்டனையோடு கலந்திருக்குமானதால் சின்னபாபஸமுத்ரமென்றால் மனுஷ்யனுக்குள்ள பாபத்தை நாசம் செய்து புண்ணியத்தை விருத்தியாக்கி மறுபடி பாபம் துடராமலிருக்கும்படி ஈச்வராக்ஞை என்ற முத்திரை வைக்கப்பட்டதென்று தாத்பர்யம்.

## விருத்தம்.

பங்கயக் கண்ணன் வாழ்க பஞ்சபாண்டவர்ஹள் வாழ்க
மங்களம் வளர்ந்தொங்கோளு மகிழ்ந்து பாஞ்சாலி வாழ்க
அங்கியி லெழுந்த வ[illegible]மையடிய ரெல்லாரும் வாழ்க
தங்கமா யிந்நூல கேட்டோர் சொல்லும்வார் வாழ்க வாழ்க.

சின்பாபஸமுத்ரம் திரௌபதிதேவி
பிரம்மோத்ஸவ பிரகடனம் முற்றிற்று.

மங்களம்.

சின்னபாபஸமுத்ராம்.

ஸ்ரீ திரௌபதி தேவி

## பிரம்ஹோத்ஸவ பிரகடனம்.

வாராஹ நதியுடன் வந்து பம்பாநதி
வாஞ்சையாய் கூடுகின்ற
தீரத்திலே திவ்ய தேசமென தேவாதி
தேவர்ஹளும் கலந்து
சீராஹ ஸ்ருஷ்டிக்க சின்னபாபஸமுத்ர
சிருங்கார வாபுரத்தில்
பாராளவே வந்து பட்டாபிஷேகமாய்
பிரபல பாஞ்சாலி யென்று
பேர்பெற்று பிரத்யப்த பங்குனித்திங்களில்
பதின் மூன்று நாள் நடத்தும்
பிரம்ஹோத்ஸவத்தோடு பிரதி சுக்ரவாரமும்
பிரதி பல்லக்குஸேவை
பரமஹர்ஷோபேத பகதர்ஹள் செய்திடப்
பார்த்து பிரத்யக்ஷமாஹ
தரிசனம் தந்திடும் திரௌபதீ தேவீயுன்
திவ்ய சரணங்கள் போற்றி
வாரிசர திங்களில் வளர்பிறை பிறந்ததும்
வந்த செந்தீவண்ணநில்
பூரிஜனகூட்டமுடன் புவனப் பிரசித்தமாய்
புண்ணிய பம்பா நதிக்கி
பேரிவேணு மிருதங்க பண்வகாஹள சங்க
படஹ வாத்தியங்களோடு
கோரிக்கை மீடேர கொண்டாடி கொண்டுபோய்
கொடிமரம் கையிலேந்தி

வீரியகஞ்சாரி விமலபூஜாரிஹள்
வரண்ணித்து கலசத்திலே
ஹரிஸஹோதரி வுன்னை ஆவாஹனம் செய்து
அழைப்பித்து கோவிலுக்கு
கிராமாதிகாரிகொடி கட்டுமுர்ச்சவபெருமை
கண்டுகொண்டாடவசமோ
துரிதஹரகடலில்வாழ் திரௌபதீ தேவிவுன்
திவ்யசரணங்கள் போற்றி
காமாக்ஷியம்மனை கனவிலும் மறவாத
கம்மாளர் கணபக்தியாய்
ஸோமாத்ம ஜனக்கிழமை ஸூர்யோதயத்திலுன்
ஸந்நிதானத்தில் வந்து
பிரோமாஸ் பதத்துடன் பேரிஹள் முழங்கிடப்
பிரசித்த வெடிஹள் போட்டு
ஆமோதமாய் மஹா அபிஷேக மர்ச்சனை
அன்ன னைவேத்யங்களும்
நேமத்துடன் செய்து நெய் தீபடிஹளேத்தி
நிபிட நவரத்ன கசித
விமானத்தில் வைத்து புரவீதிஹள் சுற்றிவரும்
விழிதின மஹோர்த்ஸவத்தை
ஸாமான்னியமோ சொல்ல ஸகல கல்மஷரஹித
ஸாகரத்தில் வஸிக்கும்
தாமரதளாக்ஷி ஸ்ரீ திரௌபதீ தேவிவுன்
திவ்ய சரணங்கள் போற்றி
இந்திர குருவாரத்தில் இன்னுதய மாகுமுன்
இன்பமாய் துயிலெழுந்து
சந்திரகுலவர்த்தனியின் ஸந்நிதியில் வந்துகண
ஸர்வ வாத்தியங்களோடு

170062
025:417
N25

மந்த்ர பூர்வசமாய் மந்த்ராபிஷேகம் செய்து
மண்டனமுடன் பூஜையும்
தந்த்ரங்கள் தவறாமல் தக்க வுபசாரமும்
தமாஷாகச்சேரியும்
யந்திரரீதிப்படி யதேஷ்டமாஹச் செய்து
யத்ஞல தினத்தில்
ஸாந்த்ரவைபவ மாஹ ஸத்கண்டமங்கலம்
ஸ்வாமி தனஞ்ஜயவம்சஜன்
சந்த்ராஹிதம செய்யும் ரம்மியோத்ஸவப் பெருமை
ரூடிநான் சொல்ல வசமோ
தந்திரதோஷஹராப்தி திரௌபதீ தேவி வுன்
திவ்ய சரணங்கள் போற்றி

சரிவைரி குருவாரம் சூரியனுதிக்கு முன்
சின்னபாடஸமுத்திரம்
மருதமித் ரகுலத்தில் மணியாய் பிறந்த பெரு
மாளக்கவுண்டர் ஸந்ததி
வர்க்க மூன்றுடைய பிரதி வருஷோத்ஸவங்களில்
வரும் பிரதம சுக்குரவாரம்
பரம பம்பா நதியின் பாரியமபிஷேகம்
பக்தியுடன் செய்தனக்கு
வாரணசிப்பட்டு வஸ்த்ராலங்காரணதி
வரபூஜைஹள் முடித்து
வீரணத்துவனிஸஹிதவெடி திவிடி மத்தாப்பு
விசித வேடிக்கையோடு
பிரடலாலயம் சுற்றி பல்லக்கு ஸேவை செயும்
பெருமை யான் சொல்ல வசமோ
துரித்ஹறா கடலில் வாழ் திரௌபதீ தேவி வுன்
திவ்ய சரணங்கள் போற்றி

பக்தியாய் வுன்னுடைய பாதாரவிந்தமே
பரமகதி யென்று நம்பி
ரக்தியாய் துரியதின ரஜிதவாரத்தில்நா
ராயண புரத்ததிபதி
சக்தியாய் நிற்குமுன் ஸந்நிதானத்திற்கு
ஸாமக்ரி யோடுவந்து
முக்தியாய் நிற்க நிர்மலமோதமான ஸிக
மபிஷேக மர்ச்சனைஹள்
யுக்தியாய் செய்து தூர்யாதீதயுக்தசா
யாசுதன் வாரத்திலும்
புக்தியாய் ஸ்வீகுரொணபாகதேய மனேகம்
பூர்வேத்யு போல் நடத்தி
வெத்தியாய் புரிசுற்றிவருமுபய மஹிமை யான்
வரண்ணிக்க வசமாகுமோ
தெக்தியாக கரஹிதாப்தி திரௌபதீ தேவி வுன்
திவ்ய சரணங்கள் போற்றி.
தினமணிதினத்திலாத் தியோதயத்திலே
திவ்யாலத்தில் வந்து
கனகநாகஸ்வரம் கனடவுல் சுதி தாளம்
கலகலென வாசித்திட
ஜனவினுத கனவெடிஹள் ஜகமதிரபோட்டு பூ
ஜாரி பூசுராஸஹிதமாய்
வினயாபிஷேகமும் வினுத சிருங்காரமும்
வியலான்ன னைவேத்யமும்
அனவரத பக்தியுட நர்பிதம் செய்து மஹா
தலங்கிருத விமானத்திலே
பணஸ்காரமாய் வைத்து மஹிதபுரிகோலமதி
மஹிமையுள சொக்காளர்ஹள்

அனையமாராமுபய மானகதமாய்ச் செய்யும்
அதிசய முரைக்க வசமோ
ஜனுபாபஹர வார்த்தி திரௌபதீ தேவி யுன்
திவ்ய சரணங்கள் போற்றி
தாராபதிக் கிழமை தரணிஸம்பவமாகும்
தருணத்தில் கன தாண்டவ
மூர்த்திகுப்பம் பிரஜைஹள் முரஜதுந்துபிபடஹ
முக்கிய வாத்தியங்களோடு
பார்த்தனிட தேவி யுன் பிரபல ஸந்நிதியிலதி
பக்தி யுக்த மாஹவந்து
தீர்த்தாபிஷேகாதி திவ்யோபசாரங்கள்
தீக்ஷலக்ஷவஹித்து செய்து
பிரபல வெடித்வனிஹளுடன் பாணம்த்தாப்புதீ
படிஹளிட காந்திஸஹித
கர்பூரகுராள சாகாநகரபுரகோல
காம்பீர்ய நாட்யங்களும்
காமாய் நடத்திடும் கிரிநோத்ஸவ பெருமை
கண்டுகொண்டாட வசமோ
துரிதஹர கடலில் வாழ் திரௌபதீ தேவியுன்
திவ்ய சரணங்கள் போற்றி.
ஹரிபிரேமஸோதரீ அங்காரகன் வாரம்
அர்க்கோதயத்துக்கு முன்
பேரிடிண்டிம முரஜபடஹகாஹளசங்க
பணவத்வனிஹள் முழங்க
பரிமளத்திரவ்யஸம் பாரங்களுடன் சித்ர
பானுகுல திலகரெல்லாம்
பிரியமாய் வந்தகில பூஜைஹள் நிறைவேற்றி
புஷ்பக விமானத்திலே

தரிசனம் செய்துன்னை ஸ்தாபித்த சாஹமதி
தந்தரமாய் சிரசில் வைத்து
புரிசுற்றி மத்தாப்பு பாணவெடி திப்படிப்
பிரபவ கந்திஹள் ஜ்வலிக்க
நெரிகாட்ய யுதசாக நாளுத்ஸவப்பெருமை
நாவினுல் சொல்ல வசமோ
துரிதஹர கடலில் வாழ் திரௌபதி தேவி வுன்
திவ்ய சரணங்கள் போற்றி
தேற்பாகன் வாரத்தில் தினகரோதயமாகும்
திவ்யஸமயத்துக்கு முன்
வீரபாஞ்சாலி வுன் விமலாலயத்துக்கு
விபுதவர்க்கஙகளோடு
பார்தனில் புகழ்பெற்ற பண்ணகுப்பத்துஷர்ப்
புதகுலத்தோர்ஹளெல்லாம்
வாவைபவத்துடன் வந்துனக்கு பசார
விதிஹள் தவராமல் செய்து
சீரானயானத்தில் ஸிங்காரமாய் வைத்து
சக்திகரஹம் மெடுத்து
பேர்பெற்ற வெடிஹள் திபடிஹள் மத்தாப்புஹள்
பாணவேடிக்கையோடு
புரகோல நிருத்தியாதி பத்மஜகிரேத்ஸவப்
பெருமை யான்சொல்ல வசமோ
துரிதஹர கடலில் வாழ் திரௌபதி தேவி வுன்
திவ்ய சரணங்கள் போற்றி
திருதச குருவாரத்தில் தினகரோதயமாகும்
திவ்ய ஸமயத்துக்கு முன்
பரமசந்தோஷமுடன் பவதாலயத்தில் பல
பக்தர்ஹள் வந்திருந்து

வர்சையராஹத்தரும் வித்தங்களைக்கொண்டு
வரசோபனத் திரவியம்
விரளமாய் வாங்கி ஜனவீரனுன் வித சதுர்
வரணஸந்ததிஹவர் கூடி
ஸிருங்கார பந்தலில் ஸாயாஹ்ன வேளையில்
சுவர்ன பீடத்தில் வைத்து
வீர்யசுல்கோத்வாஹம் விஜயனுக்கு முனக்கும்
விபபிரர் நடத்த வீதி
திருக்கோலம் வரும் தசமதின திருமணப்பெருமை
தெரிந்து நான் சொல்லவசமோ
துரிதஹரா கடலில்வாழ் திரௌபதீ தேவி வுன்
திவ்ய சரணங்கள் போற்றி
சுரமந்திரி வாரத்தில் சுப்ராலாபங்களுடன்
சூரியோதயத்துக்கு முன்
வரகண்டியன் குப்பம் வாயுமித்ரகுலோத்ப
வர்ஹரெல்லோரும் கூடி
ஸரசமாய் வந்துனது ஸந்நிதானத்திலே
ஸர்வ ஸம் பாரங்களும்
அற்பிதம் செய்துனக் கபிஷேகமத்யந்த
மானந்தமாய் நடத்தி
முராஜாதி வாத்தியங்கள் முழங்கிட மஹாமணி
விமானத்தில் வைத்து பிரியமாய்
ஸாஹமொடு கிளைஞர் கனபுர பிரதக்ஷிணை
கமன சிருங்கார நாட்ய
பரிதயுத தசமதின டவ்யோத்ஸவப் பெருமை
பாவித்து சொல்ல வசமோ
துரிதஹரா கடலில்வாழ் திரௌபதீ தேவி வுன்
திவ்ய சரணங்கள் போற்றி

பார்க்கவன் வாரத்தில் பானூதயமாகுமுன்
பங்கியாய் ஸந்நிதிக்கு
கிராமாதிபதி வந்து கன குந்தி மைந்தரை
சூராளாருடத்துடன்
வரபட்டசாயப்பு விமல சன்னிதி சேர்த்து
விபுத வர்க்கங்களோடு
பாரதக்கதை கேட்டு பலிகொடுத்தரவானை
பிரபல கோட்டையை பிடித்து
பரமயோகீந்திர படேஸாய்ப்பினுமதியில்
பூதேவராலக்னியை
பிரதிஷ்ட்டாபனம் செய்து பக்தர்ஹளுடன் காரூ
பூர்வகமாய் தீமெறித்து
புரபிரதக்ஷிணம் வரும் பசுபதி திருநேத்ஸவப்
பெருமை யான் சொல்லவசமோ
துரிதஹர கடலில்வாழ் திரௌபதி தேவி உன்
திவ்ய சரணங்கள் போற்றி.
பிருகுவாரமாதித்யன் பிராக்திசைச் சேருமுன்
பாபஹரிதாப்திவாஸ
பிருதுல கிருஷீஜீவனோபாய வேங்கடபதியின்
பரமபரை ரெட்டிமார்ஹள்
பிரத்தியப்த முன்னுடைய பிரம்மோத்ஸவத்தில் க
பாலபிர்த்நாள் கலந்து
வரும் சுக்குரவாரத்தில் வர தீர்த்தயபிஷேகம்
வாஞ்சையாய் செய்துனக்கு
தௌர்யத் திரிகத்துடன் தங்கபல்லக்கிலதி
திவ்ய வைபோகமஹா
பிரகடமத்தாப்பு தீபடிபாண வேடிகளை
பிரபல வெடித்வனிஹளோடு

சேர்த்தாலயம் சுற்றி சேவித்திடும் பெருமை
சொல்ல யென்னாலாகுமோ
துரிதஹர கடலில்வாழ் திரௌபதீ தேவி யுன்
திவ்ய சரணங்கள் போற்றி· 14
கரியவன் கிழமையில் கதிரோன் பிறக்குமுன்
கர்ணீகர தருதுகமாய்
வர்ண்ணிக்க தக்க வுன் வரஸன்னிதானத்தில்
வந்துனக் கபிஷேகமும்
சிருங்காரமும் மஹா சிறப்புடன் பூஜையும்
சித்ய ரன்னனைவேத்யமும்
அற்பிதம் செய்தற்க நஸ்தமய ஸமயத்தி
லகில பக்தர்ஹள் கூடி
பருமளான் விதபுஷ்பபல்லக்கில்வைத்துன்னை
பல்குனன ஸஹிதமாஹ
மர்த்தலா முதலான மஹித வாத்தியங்களுடன்
மூலநகர சுற்றிமஞ்ஜன்
ரோடுமாதித்ய நாளுத்ஸவப்பெருமை
நான் சொல்ல வசமாகுமோ
துரிதஹர கடலில்வாழ் திரௌபதி தேவியுன்
திவ்ய சரணங்கள் போற்றி, 15
மார்த்தாண்டன் சுதனுன மந்தனிட வாரத்தில்
மிஹிரோதயத்துக்கு முன்
விருஜினஹர வாரத்தில் வீற்றிருக்கும் பண்ட
ப்ச ரெட்டிஹள் யாவரும்
பிரமதமாய் வந்துனது பிரபல ஸன்னிதியில் பல
பிராக்பார வெடிஹள் போட்டு
தார்யான் விதாநீத தீர்த்தாபிஷேகாதி
திவ்யோபசாரங்களை

பிரியமுடன் செய்தன்னே புஷ்பகத்தில் வைத்து
 பெரிய குலத்தில் பிரஜைஹள்
பார்த்து ஸந்தோஷிக்க பஞ்சவாரம் சுற்றி
 பாணவேடிக்கையோடு
யுரபிரதக்ஷிணம் வரும் பூஷநாளுத்ஸவப்
 பெருமையைச் சொல்லவசமோ
துரிதஹர கடலில்வாழ் திரௌபதீ தேவியுன்
 திவ்ய சரணங்கள் போற்றி 16
பிரத்தியோதனன் ஏழமை பானுதயமாகுமுன்
 பாபஹரவாரத்திவிட்ர
வர்க்கயானந்தமாய் வந்துனது ஸன்னதியில்
 வேதனினதங்களோடு
பேரிதாள மிருதங்க பணவ வாத்தியங்களின்
 பிரபவ த்வனிஹள் முழங்க
பர்ம பட்டம் விருத்த பூசுரா பூஜித்து
 புகழ்பெற்ற தர்மருக்கு
சிர்வஷபூஷணமாக்கி சிறப்பாக மகுடாபி
 ஷேகமும் மதிகதான
தர்மங்கள் செய்து புரதிருவீதி சுற்றிவரும்
 திரயோதசதினத்தின்
சீருடைய பட்டாபிஷேகோத்ஸவப் பெருமை
 சொல்ல யென்தரமாகுமோ
துரிதஹா கடலில்வாழ் திரௌபதீ தேவியுன் 17
 திவ்ய சரணங்கள் போற்றி.
பிருகுபுத்ர வாரத்தில் பிரத்யோதனனையப்
 பிரகடஸமயத்துக்குமுன்
கிரயஹரவாரிநிதி நியலநிர்ணேஜகன்
 நியமமாய் வந்துனக்கு

ஸர்வோபசாரங்கள் ஸாங்கமஹச் செய்து
ஸாலங்கிருதாந்தலத்தில்
வரவைபவத்துடன் வந்து கணவாத்தியங்கள்
வாசிக்க வெடிஹள் போட்டு
புரஜனங்கள் கூடி பூரிமத்தாப்புஹள்
பிரபல தீபடிஹளேற்றி
கீர்த்திகரமான வுன் கோவிலை மூன்றுதரம்
கொண்டாடி சுற்றிவைக்கும்
பிரதிக்ஷெளராணகின பல்லக்கு ஸேவையின்
பெருமை யான் சொல்லவசமோ
துரிதஹர கடலில்வாழ் திரௌபதீ தேவியுன்
திவ்ய சரணங்கள் போற்றி. 18
திருவளர் திரௌபதீ தேவியுன் திருவிழா
தினகட்டளைகாரர்கஹள்
பெருமையாஹச் செயும் பிரம்மோத்ஸவதின் வை
பவசரித்திர பிரகடனம்
உருதியாய் வுன்னுடைய வுள்ள த்தின் கிருபயினால்
உத்ஸஹ ராஹ சொன்ன
விருத்தங்களின் விவிதவி குணங்களை நீக்கி
விமலஸுகுணங்களாக்கி
வரகண்டஸரமாஹ வரிசையாய் கோத்திதை
வஹிக்கும்படிக்கி செய்ய
விருதுடைய கவிஹளை வினயமாய் பிரார்த்தித்து
விச்வஜனனீ வுனக்கு
அற்பிதம் செய்வதை அங்கீகரித்தென்னை த
ஆதரணை செய்யுமம்மா
துரிதஹர கடலில்வாழ் திரௌபதீ தேவியுன்
திவ்ய சரணங்கள் போற்றி 19

17062

...ருஹிதேத்ரீசேம்மாளு க்ராம
...ம்மாவுரம் பிறந்து
சரணமென்றன் திவ்ய சரணபங்கஜஸேவை
செய்யுமப்பையசர்ம்மா
வர்ணனை செய்தகவைர்ணித மஹாதேவி
வராபாராசக்திவுன்னை
உருதியாய் நமபீந்த உத்ஸவபிரகடனம்
உலகில் படித்தபேரும்
பரமஸந்தோஷமாய் படித்த ஸாராம்சமுன்
பக்தர்க்குரைத்த பேரும்
உரைப்பதைச் செவியிலதி உத்ஸாஹமாய் கேட்டு
உள்ளம் களித்தபேரும்
பிரியமாய் கேட்டு பலபிரதிஹள் செய்திட்டிதைப்
பிரசித்தம் செய்தபேரும்
தருமரிட தேவி ஸ்ரீதிரௌபதீ தேவியுன்
திருவருள பெற்று வாழ்வார். 20

## விருத்தம்.

பங்கயக்கண்ணன் வாழ்க பஞ்சபாண்டவர்ஹள் வாழ்க
மங்கலய் வளர்ந்திதந்நாளும் மகிழ்ந்துபாஞ்சாலி வாழ்க
அங்கியிலெழுந்த வம்மை யடியரெல்லாம் வாழ்க
துங்கமாயிந்நூல்கேட்போர்சொல்வோர் வாழ்க வாழ்க

### சின்னபாய ஸமுத்திரம் திரௌபதீ தேவி
### பிரம்மோத்ஸவ பிரகடனம்.

முற்றிற்று.

9B
2-176